# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
## திருச்சிராப்பள்ளி – 620 024

முனைவர் க.கோபிநாத்
பதிவாளர்(பொ)

தொலைபேசி: 0431-2407072
தொலைநகலி: 0431-2407045

**ந.க.எண்: 44884 /அ3/ 2019-2020/நாள்: 17.06.2021**

பெறுநர்
அனைத்து துறைத்தலைவர்கள்,
மையங்கள் மற்றும் Cells ஒருங்கிணைப்பாளர்கள்

அய்யா / அம்மையீர்

வணக்கம்.

பொருள்: பாரதிதாசன் பல்கலைக்கழகம் - ஆண்டறிக்கை 2019-2020 – தகவல்கள் கோருதல் - தொடர்பாக.

* * * * * * *

பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் 1981 – பிரிவு 27-இன் படி பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு அடுத்து வரும் பேரவையின் ஆண்டுக்கூட்டத்தில் வைக்கப்பெறுதல் வேண்டும்.

தற்சமயம் 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு ஆண்டறிக்கை தமிழிலும் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்படவுள்ளது.

எனவே, இக்கடிதத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை பின்னிணைப்பில் கண்டுள்ள படிவங்களின்படி தயாரித்து (விவரங்கள் அனைத்தையும் MS Word -இல் (English Font: Times New Roman and Size 12, Tamil Font – Bamini and Size -12) asection@bdu.ac.in என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு துறைத்தலைவரின் மின்னஞ்சல் முகவரியில் இருந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இது குறித்த விபரங்கள் மற்றும் அட்டவணைகள் நமது பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

சென்ற ஆண்டு புதிய முறையில் தயாரிக்கப்பட்டதனை கருத்தில் கொண்டு தங்களின் துறைகள், மையங்கள், அலகுகள், குழுக்கள் குறித்த விபரங்களை தற்போது கோரப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பிட வேண்டப்படுகிறது. இந்த ஆண்டறிக்கை விவரங்கள் நிர்வாகக் காரணங்களால் சற்றே தாமதித்து கோரப்பட்டுள்ளதால், இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி **02.07.2021** அல்லது அதற்கு முன்னரே மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைத்து ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பதிவாளர்(பொ)

இணைப்பு:
1. Instructions
2. பின்னிணைப்புகள் (தமிழிலும், ஆங்கிலத்திலும்)

பதிவாளர் அலுவலகம்,
'அ' பிரிவு,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி – 620 024.

பொருள்: 2019-2020ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தொடர்பான தகவல் சேகரிப்பு படிவம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல் - தொடர்பாக.

* * * * * * *

பாரதிதாசன் பல்கலைக்கழக ஆண்டறிக்கை, 2019-20 ஆம் ஆண்டிற்கு தயாரிப்பதற்கு தகவல் பெறும் படிவங்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நம் பல்கலைக்கழக துறைகள், மையங்கள், குழுக்கள் (Cells) மற்றும் அலகுகள் பதிவிறக்கம் செய்து கொள்ள ஏதுவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை www.bdu.ac.in/annualreport.php என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நம் பல்கலைக்கழக துறைகள், மையங்கள், குழுக்கள் (Cells) மற்றும் அலகுகள் விவரம், அனைத்து துறைத் தலைவர்கள், மையங்கள் மற்றும் Cells ஒருங்கிணைப்பாளர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை மற்றும் தகவல் பெறும் படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பதிவாளர்(பொ.)

அ.மு.சா.கு.எண். 44884/அ3/2019/நாள்:17.06.2021

பெறுநர்:
இயக்குநர்,
தகவலியல் மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி – 24.